# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

**Calendar** :
**Miscellaneous** :
**Preliminary Register** : **Case No. CC. 35/2024**
**Sessions** :
**Deposition of witness for** : **Prosecution LW 2**
**Name** .. திரு. கணேஷ்

**Father's/Husband's Name** .. திரு. குருசாமி
**Village**
**Taluk** ..
**Caste** ..
**Calling** ..
**Religion** ..
**Age** .. **32**

**Date: 03/09/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

1. நான் தற்போது எண் 72, துர்கை அவென்யூ, 5வது தெரு,சேலவாயல் என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். இன்ஜி யராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா ஆவார். ஆஜர் எதிரிகள் அக்காவின் மாமனார், மாமியார் ஆவார்கள். 2015ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்பு அ.சா.1

கருவுற்ற போது அ.சா.1 ன் நாத்தனாருக்கு குழந்தையில்லாத்தால் ஆஜர் எதிரிகள் அ.சா.1 ன் கருவை கலைக்க முயற்சி செய்தார்கள்.

2. அ.சா.1 ஐ சிறிது நாட்கள் எங்களுடன் வைத்திருந்தோம். பிறகு வளைகாப்பு நடைபெற்றது. அதன் பிறகு அ.சா.1ன் கணவர் வீட்டிற்கு வந்து அ.சா.1ஐ பார்க்கவில்லை. 11 மாதம் நாங்கள் தான் அந்த குழந்தையை பார்த்துக்கொண்டோம்.

3. 09.04.2023 அன்று அ.சா.1னிற்கும் அவருடைய கணவருக்கும் சிறு சண்டை நடந்தது. அன்று இரவு எனது அக்கா மகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அ.சா.1 சுயநினைவில்லாமல் மயங்கிய நிலையில் இருப்பதாக சொன்னார். பிறகு நான் எனது பெற்றோருடன் அ.சா.1ன் வீட்டிற்கு சென்ற போது அ.சா.1 சுயநினைவின்றி காணப்பட்டார். ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம்.

4. அ.சா.1ன் 30 சவரன் நகையை ஆஜர் எதிரிகள் தூண்டுதலின் பெயரில் அ.சா.1ன் கணவர் கேட்ட போது அ.,சா.1 15லிருந்து 20 சவரன் நகையை கொடுத்துள்ளார் மீதி நகையை அ.சா.1 ன் கணவர் கேட்டதால் அதை தர மறுத்ததால் அ.சா.1 ஐ அவரது கணவர் அடித்ததில் அ.சா.1க்கு கன்னம் வீங்கியது. இடது தோள்பட்டையில் அடிபட்டது அவர் சுயநினைவின்றி கிடந்தார். உள்காயங்கள் நிறைய இருந்தது. ஸ்டான்லி மருத்துவமனையில் நாங்கள் அனுமதித்திருந்தோம். 3 நாட்கள் தொடர் மருத்துவ சிகிச்சையில் இருந்தார். M2 காவல் நிலையத்திலிருந்து விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

5. அ.சா.1ன் கருவை கலைக்க மருத்து கொடுத்த தகவலை தற்போது தான் நான் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றாலும். இதற்கு முன் இதனை புகாரிலும் போலீஸ் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 15 சவரன் நகை கொடுத்ததை புகாரிலோ, வாக்கு மூலத்திலோ சொல்லவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கையில் உள்ளது. என்னுடைய வாக்கு மூலத்தில் நான் சொல்லவில்லை.

6. சம்பவத்தை பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றாலும் என்னுடைய வீட்டில் உள்ளவர்கள் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். ஒரே காம்பௌண்டுக்குள் எனது அக்காவும் மாமாவும் மாமாவின் அப்பாவும் அம்மாவும் தனித்தனியாக உள்ளார்கள் என்றால் சரிதான்.

7. எனது அக்கா வீட்டருகே வேறு வீடு உள்ளது என்றால் உள்ளது. அங்கு நிறைய போர் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது அக்கா அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் நன்றாக பேசுவார்களா என்றால் ஒருவர், இருவருடன் பேசுவார்.

8. சம்பவத்தைபற்றி எனக்கு எத்தனை மணிக்கு தெரியும் என்றால் இரவு 09.00 மணிக்கு தெரியும். சம்பவம் நடந்த போது சத்தம் கேட்டு அக்கம் பக்கம் உள்ளவர்கள் யாரேனும் உதவிக்கு வந்தார்களா என்றால் இல்லை.

9. சம்பவம் நடந்தது உண்மை என்றால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் உதவிக்கு வந்திருப்பார்கள் அவ்வாறு நடக்காத்தால் தான் யாரும் வரவில்லை என்றால் சரியல்ல.

10. சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும் பாதிக்கப்பட்டவர் என்னுடைய சகோதரி என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. உங்களது அக்காவின் கணவர் தான் உங்களது அக்காவையும் அவரது குழந்தையையும் பார்த்துவந்தார் என்றாலும் இதற்கு முன்னால் புகார் ஏதேனும் கொடுத்துள்ளீர்களா என்றால் மாதவரம் காவல் நிலையத்தில் முன்பு ஒரு புகார் கொடுத்து ளோம். அதை நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

12. உங்களது அக்காவின் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால், அவர் சொந்தமாக டிராவல்ஸ் மற்றும் மெழுகுவர்த்தி தயார் செய்து வருகிறார். எவ்வளவு வருமானம் வரும் என்றால் 1லட்சம் ரூபாக்கு மேல் வருமானம் வரும்.

13. மாதம் 1 லட்சம் ரூபாய் சம்பதிக்கும் உங்களது அக்காவின் கணவர் உங்களிடத்தில் நகையோ பணமோ கேட்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், உங்களது அக்கா தனிக்குடித்தனம் போக வேண்டும் ஆடம்பரமாக இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

14. உங்களது அக்கா அவரது மாமனார் மற்றும் மாமியார் மீது தனிக்குடித்தனம் போக வேண்டும் என்று இவ்வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல.

15. உங்களது அக்காவின் மாமனார் மற்றும் மாமியார் சொந்த வீடு மற்றும் வருமானம் உள்ளவர்கள் என்றால் சரிதான். உங்களது அக்காவிடம் நகைகளை கேட்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

16. போலீசார் என்னிடத்தில் வாக்கு மூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. உங்களது அக்காவும் உங்களது பெற்றோர்களும் சொன்னதை கேட்டு இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.09.03 18:40:29 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்

Clr.No.19

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC. 35/2024** |
| **Sessions** | **:** | |
| **Deposition of witness for** | **:** | **Prosecution LW 3** |
| **Name** | **..** | திரு. காளியம்மாள் |
| **Father's/Husband's Name** | **..** | திரு. குருசாமி |
| **Village** | | |
| **Taluk** | **..** | |
| **Caste** | **..** | |
| **Calling** | **..** | |
| **Religion** | **..** | |
| **Age** | **..** | **58** |

**Date: 03/09/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எண் 72, துர்கை அவென்யூ, 5வது தெரு, சேலவாயல் என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகள் மகளின் மாமனார், மாமியார் ஆவார்கள்.

2. திருமணம் நடைபெற்று 3 மாதங்களிலிருந்து எதிரிகள் பணம் கேட்டு அடித்து கொடுமை படுத்தி வந்தார்கள். 09.04.2023 அன்று

அ.சா.1ன் மகள் எனக்கு போன் செய்து அம்மாவை அப்பாவும் அவர்கள் வீட்டில் உள்ள அனைவரும் அடித்துள்ளார்கள். தலைமுடியை பிடித்து அடித்ததாக எனது பேத்தி சொன்னார். நான் எனது கணவர் மற்றும் எனது மகனுடன் அ.சா.1ன் வீட்டிற்கு சென்று பார்த்த போது அ.சா.1 மயங்கிய நிலையில் இருந்தார். ஆம்புலன்ஸ் மூலம் ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்.

3. உங்களது மகளிடம் கேட்ட போது தனது கணவர் நகையை கேட்டு கொடுக்க மறுத்ததால் அடித்ததாக சொன்னார். அ.சா1.க்கு கண்ணில் காயம் ஏற்பட்டது. பிறகு போலீசில் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிர் தரப்பு குறுக்கு விசாரணை

4. உங்களது வீடு எங்கு உள்ளது என்றால் சேலவாயிலில் உள்ளது எனது மகள் வீடு மாதவரத்தில் இருந்தது.பத்து நிமிடத்தில் என்னுடைய மகளுடைய வீட்டிற்கு போய்விடலாம். சம்பவத்தை பற்றி என்னுடைய பேத்தி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

5. உங்களது மருமகன் என்ன வேலை செய்கிறார் என்றால், கார் ஓட்டுகிறார். எவ்வளவு சம்பாதிக்கிறார் என்றால் தெரியாது. உங்களது சம்பத்திக்கு சொத்து பத்தெல்லாம் உள்ளது என்றால் சென்னையில் 2 மற்றும் ஊரில் 1 வீடு உள்ளது. உங்களது சம்பந்தி தற்போது வரை வேலை செய்துவருகிறார் என்றால் சரிதான். நல்ல வருமானம் உள்ளது.

6. உங்களது மகள் உங்களிடம் தனிக்குடித்தனம் போக வேண்டும் என்று சொல்லியுள்ளாரா என்றால் சரிதான். நான் தான் பணம் கொடுத்தேன். மருமகனுக்கும் அவருடைய அப்பா அம்மாவிற்கும் நல்ல வருமானம் உள்ளது என்பதால் உங்களுடைய மகளின் நகையை கேட்பதற்கான தேவையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டுக்கார் மளிகை கடை வைத்துள்ளார்.

7. உங்கள் வீட்டின் பக்கத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். உங்களது மகள் வசிக்கும் வீட்டிற்கு பக்கத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

8. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எனது கடையிலோ வீட்டிலோ பிரச்சனை இருந்தால் வந்து என்ன என்று கேட்பார்களா என்றால் சரிதான்.

9. உங்களது மகளது வீட்டில் எதாவது பிரச்சனை இருந்தால் அக்கம் பக்கம் இருப்பவர்கள் வந்து கேட்பார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. உங்களது மகனுக்கும் மகளுக்கும் பிரச்சனை இருந்தால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்து விசாரித்திருப்பர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11. நீங்கள் மருத்துவம் பார்த்த்தற்கான சான்றுகளை போலீசாரிடம் கொடுத்துள்ளீர்களா என்றால் சரிதான். பேலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள்.

12. உங்களது மருமகனுக்கும் அவரது வீட்டாருக்கும் நல்ல வருமானம் உள்ளது என்றாலும் அவர்கள் உங்களது மகளை அடிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மகள் என்பதால் அவருக்கு சாதகமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.09.03 18:40:36 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**

Clr.No.19

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC. 35/2024** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution LW 4** |
| **Name** | .. | திரு. குருசாமி |
| **Father's/Husband's Name** | .. | திரு. கருப்பசாமி |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **58** |

**Date: 03/09/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

1. நான் தற்போது எண் 72, துர்கை அவென்யூ, 5வது தெரு,சேலவாயல் என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகள் மகளின் மாமனார், மாமியார் ஆவார்கள்.

2. சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக இரவு 09.00 மணிக்கு என்னுடைய பேத்தி எனக்கு போன் செய்து அ.சா.1ஐ அவரது கணவர் நகையை கேட்டு கொடுக்க மருத்ததால் தலையை பிடித்து இருசக்கர வாகனத்தில் இடித்து காயம் ஏற்பட்டதாக தகவல் சொன்னார். நானும் எனது மனைவி மற்றும் எனது மகனுடன் அ.சா.1ன் வீட்டிற்கு சென்று பார்த்த போது  மயங்கிய நிலையில் இருந்தார். ஆம்புலன்ஸ் மூலம் ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்.

3. உங்களது மகளிடம் ஏன் அடித்தார்கள் என்று கேட்ட போது ஆஜர் எதிரிகள்  அ.சா.1 ன் கணவருடன் சேர்ந்து நகையை கேட்டதாகவும் நகையை கொடுக்க மறுத்ததால் அடித்ததாகவும் கூறினார்.

4. அ.சா.1ன்னிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிர்தரப்பு குறுக்கு விசாரணை

5. நீங்கள் இருக்கும் வீடு எங்கு உள்ளது என்றால் சண்முகாநகர் கல்லூரி அருகில் உள்ளது.  உங்களது பேத்தி உங்களுக்கு போன் செய்தாரா என்றால் ஆம்.  உங்களது பேத்தி சொல்லி தான் அனைத்தும் தெரியும் என்றாலும் நேரிடையாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

6. உங்களது சம்பந்திக்கு சொத்து உள்ளதா என்றால் உள்ளது. உங்களது மருமகன் டிராவல்ஸ் வைத்துள்ளாரா என்றால் வைத்துள்ளார். அவருக்கு நல்ல வருமானம் உண்டு என்றால் சரிதான்.

7. உங்களது மகளிடம் நகையை கேட்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு கிடையாது என்றாலும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் எ ன்றால் சரியல்ல நான் சொல்வது உண்மை.

8. மூன்று எதிரிகளும் உங்களுடைய மகளை தகாத வாத்தைகளால் திட்டவோ, அடிக்கவோ இல்லை என்றாலும் அ.சா.1 எனது மகள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. எதிரிகள் எந்த ஒரு நகையோ பணமோ கேட்கவில்லை வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.09.03 18:40:43 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**